அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:39/2016
தேதி : 16/02/2016

தமிழக சட்டமன்ற பேரவையின் நிதியமைச்சர் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிதிநிலை அறிக்கை, கூடிய விரைவில் தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் வர இருப்பதால் சிறப்பான திட்டங்கள் குறித்து அறிவிக்க இயலாத சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களாக கொங்கு மண்டல விவசாயிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கையான அத்திக்கடவு அவினாசி கால்வாய் ஆரம்பக்கட்டப் பணிகள் கூடிய விரைவில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பும் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசுக்கு திருத்திய கருத்துரு அறிக்கை அனுப்பப்படும் என்ற அறிவிப்பும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இதன் மூலம் அவினாசி உள்ளிட்ட பல பகுதிகளில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டங்களுக்கு முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம்.

கும்பகோணத்தில் நடைபெற்றுவரும் மகாமகத் திருவிழா சிறப்பாக நடைபெற ரூபாய் 135.38 கோடி அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கும்பகோணத்தில் லட்சக்கணக்கில் மகாமகத் திருவிழாவில் கலந்து கொள்ள இருக்கும் பொதுமக்களுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 1032.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 07.02.2016 அன்று சமத்துவ மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளபடி மெட்ரோ ரயில் பணிகளை விரைவில் முழுமையாக முடித்து பொது மக்கள்

பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பதால் வழக்கமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. சட்டமன்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும் அரசு தொலைநோக்குப் பார்வையுடன் தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றதொரு சிறப்பான நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து செயல்பட வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்